DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----

**IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE COURT KUNNAM**

| | | |
|---|---|---|
| Calendar | : | STC /19 /2021 |
| Miscellaneous | : | Kunnam P.S |
| preliminary Register | : | |
| Sessions | : | |

| | | |
|---|---|---|
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | மனுதாரர் சாட்சி4 |

| | | |
|---|---|---|
| Name | : | கற்பகம் |
| Father's/Husband Name: | | சேகர் |
| Village | : | பேரையூர் |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 50/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08/03/2023

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சுமார் 4 வருடத்திற்கு முன்பு பரஞ்சோதி என்பவர் ஆடு மேய்த்துக்கொண்டிருந்தார். அப்போது எனது கணவர் இருசக்கர வாகனத்தில் அங்கு வந்து கொண்டிருந்தார். அப்போது ஆடுகள் ஓடி ஒன்றோடொன்று மோதிக்கொண்டது. இதனால் பரஞ்சோதி ஜாடைமாடையாக பேசிக்பகொண்டே எனது வீட்டை கடந்து செல்வார். நாங்கள் எந்த பிரச்சனையும் செய்வதில்லை. பின்னர் 2 வருடம் கழித்து எனது கணவர் ஆலத்தூர் சென்றிருந்தார்.
2) அன்றைய தினம் எங்கள் வீட்டிற்குள் பரஞ்சோதியின் ஆடுகள் நுழைந்து விட்டது. அதற்கு பரஞ்சோதி ஆட்டைபேசுவதுபோல் பேசிக்கொண்டே ஆடுகளை அழைத்து சென்றுவிட்டார். பின்னர் ஆலத்தூரில் இருந்து 3 மணிக்கு எனது கணவர் வீட்டிற்கு வந்து விட்டு பின்னர் மீண்டும் 3.15 மணிக்கு சென்று விட்டார். அப்போதும் பரஞ்சோதி ஆடு மாடுகளை ஓட்டிகொண்டு செல்லும்போது பேசிக்கொண்டே சென்று கொண்டிருந்தார். மேலும் நான் வீட்டில் இருந்தபோது பரஞ்சோதி வீட்டிற்குள் வந்து என்னை அரிவாள்

மனையை எடுத்து அடிக்க வந்தார். நான் சத்தம்போட்டதும் பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் வருவதை பார்த்து சென்றுவிட்டார். மறுநாள் காலை 10 மணிக்கு எனது கணவர் வந்ததும் நடந்த விபரத்தை நான் சொன்னேன் . பின்னர் குன்னம் காவல் நிலையம் வந்தோம். புகார் கொடுத்தோம்.

3) மறுநாள் எங்களை காவல் நிலையத்தில் இருந்து கூப்பிட்டார்கள். வந்து விசாரணை செய்தார்கள். பின்னர் மீண்டும் எங்களை கூப்பிடும்போது வருமாறு சொன்னார். பின்னர் 2 நாட்கள் கழித்து கூப்பிட்டார்கள். விசாரணை செய்தார்கள். நான் வெளியே வந்து விட்டேன். போலிஸ்காரர்கள் எனது வீட்டுக்காரரை மிரட்டி உள்ளார்கள். நான் எனது கணவர் வெளியே வந்ததும் கேட்டபோது பணம் கேட்பதாக சொன்னார். திரும்பி மறுநாள் ஊர்க்காரர்களை அழைத்து கொண்டு காவல் நிலையம் வந்தோம்.

4) அப்போது பரஞ்சோதி வராததால் நாளை உங்களை கூப்பிடுகிறோம் என்று சொல்லி அனுப்பி விட்டார்கள். பின்னர் 20 நாட்கள் கழித்து இரவு 2.30 மணிக்கு 2 போலிஸ்காரர்கள் வீட்டிற்கு வந்து எனது கணவரை அடித்து வண்டியில் கூட்டி சென்றார்கள். வண்டியில் ஏற்றும்போதுதான் அவர்கள் போலிஸ் என்று எனக்கு தெரிந்தது. நானும் எனது மகளும் மறுநாள் காலை 7 மணிக்கு காவல் நிலையம் வந்தோம். எனது கணவரை பார்க்கவிடவில்லை அவர் கீழே உட்கார்ந்திருந்தார். எதையும் வாங்கி கொடுக்க விடவில்லை.

5) அன்று இரவு 9 மணிக்கு போலிசார் வண்டியில் எனது கணவரை பெரம்பலூருக்கு அழைத்து சென்றார்கள். நாங்களும் சென்றிருந்தோம். 1/2 மணி நேரம் கழித்து எனது கணவரை விட்டு விட்டார்கள். பரஞ்சோதி கொடுத்த புகாரின் அடிப்படையில் எனது கணவரை போலிசார் பெரம்பலூர் அழைத்து சென்றார்கள். நாங்கள் கொடுத்து புகாரின் பேரில் பரஞ்சோதியின் மீது வழக்கு தொடர்ந்தார்கள். மேற்படி வழக்கில் பரஞ்சோதி அபராதம் கட்டி விட்டு வந்து விட்டார். பரஞ்சோதி எனது கணவர் , எனது பெயர் மற்றும் எனது மகள் பெயரில் புகார் கொடுத்திருந்தார்.

6) அந்த வழக்கில் இருந்து நாங்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டோம். மேற்படி வழக்கு கூடுதல் மகளிர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்றது.

WWW.NMMC.ND